அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்

தேசிய மட்டத்திலான "அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2021"

திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி - பிறந்த ஆண்டு2010 (வளர்நிலை5)

தெரிவுப்போட்டி: வளாகத்தில் அன்னைத் தமிழ்முற்ற இறுதிப்போட்டி: 27.03.2021 28.03.2021

---

1. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
   பொன்றாது நிற்பதொன் றில் (233)

   *தனக்கு இணையில்லாமல் நிற்கும் ஓங்கிய புகழைத் தவிர, உலகத்தில் இறவாமல் நிற்பது வேறொன்றுமில்லை.*

2. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
   மாற்ற லதுவே படை (765)

   *எமனே சினங்கொண்டு எதிர்த்து வந்தாலும், திரண்டு நின்று எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையதே படையாகும்.*

3. நவில்தொறும் நூனயம் போலும்
   பயில் தொறும் பண்புடையார் தொடர்பு (783)

   *நல்ல பல நூல்களைக் கற்கக் கற்க மேன்மேலும் பயன் தருதல் போல, பழகப் பழக நல்ல பண்புடையவரின் நட்பு சிறப்பைத் தரும்.*

4. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
   செயற்கரிய செய்கலா தார் (26)

   *செய்வதற்கு உண்மையிலேயே அரிதான செயல்களைச் செய்து முடிப்பார் பெரியார். ஆனால் சிறியோர்களோ செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டார்கள்.*

5. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
   பெற்றத்தாற் பெற்ற பயன் (524)

   *தன்னுடைய சுற்றத்தாரால் தான் சூழப்பட்டு இருக்கும் வகைகளை அறிந்து, அவர்களை அணைத்து வாழும் வாழ்க்கை ஒருவன் செல்வத்தைப் பெற்றதனாலுள்ள பயனாகும்.*